நிறைவான, இதயபூர்வமான நன்றியையும் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்பிக்குள் தவமிருந்து முத்துக்கள் உதிப்பதுபோல், செந்தமிழ் பூமிக்கு சேவையாற்றி சந்தனமாய் கரைந்த தாய்! ஊர் வாழ உயிர்கள் வாழ உருகும் மெழுகாக ஓடிஓடி உழைத்த தாய்! ஆணாதிக்கம் நிறைந்த அரசியலை தேனாதிக்கம் நிறைந்த சாதனைகளால் வாகை சரித்திரத்தை வடித்த தாய்! இலட்சத்திற்கும் மேற்பட்ட எளியோருக்கும் பச்சை மையில் கையெழுத்திடும் பாக்கியத்தைக் கொடுத்த நம் தாய்! *(மேசையைத் தட்டும் ஒலி)* எளிய தொண்டனான என்னை மூன்று முறை முதல்வராக்கி, தான் சுமந்த தலைப்பாகையை, நான் சுமக்கும் புண்ணியத்தை, எளியவன் எனக்கும் எடுத்தே கொடுத்த தாய்! இப்புவியில் தமிழினம் சிறப்புறவே, ஒப்பில்லா தம் பிறப்பை ஒப்படைத்து உழைத்த தாய்! *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அம்மா அவர்கள் நம்மை எல்லாம் நம்பி இப்பேரவையில் உரைத்த கடைசி சூளுரை, “எனக்குப் பின்னாலும், நூறு ஆண்டுகள் ஆனாலும் தமிழகத்தை கழகம்தான் ஆளும்” என்பதுதான்! *(மேசையைத் தட்டும் ஒலி)* காலமகள் தந்த கோலத் திருமகளின் அந்தக் கடைசி சபதத்தை கணீர்குரல் சத்தியத்தை, தேசியகீதமாக நாம் தினம்பாடி உழைப்போம்! மூன்றாம் முறையாகவும் இந்த முத்தமிழ் இயக்கத்தின் ஆட்சியை அமைத்திட, ஓயாது உழைப்போம்! *(மேசையைத் தட்டும் ஒலி)* களம் புகும் போர்க்களத்தில் கம்பீரமாய் ஜெயிப்போம்! *(மேசையைத் தட்டும் ஒலி)* புனித ஜார்ஜ் கோட்டையில் மீண்டும் சித்திரைத் திங்களில் *(மேசையைத் தட்டும் ஒலி)* முத்திரை பதித்து புது வரலாறு படைப்போம்! அதற்காக ஊன் உறக்கம் தவிர்ப்போம்! ஒன்றரைக் கோடி சிப்பாய் படையோடு வாகை சரித்திரம் வடிப்போம் என்று கூறி, *(மேசையைத் தட்டும் ஒலி)* மீண்டும் மே திங்களில் இப்பேரவையில் மீண்டும் சந்திப்போம் என்று சொல்லி, எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*